# ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு 975 மில்லியன் ரூபாய் செலவாகுமாம்!



## பொதுத் தேர்தலுக்கு இரு மடங்கு தேவை என்கிறார் தேர்தல்கள் ஆணையாளர் சமன் ரத்நாயக்க

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு 975 மில்லியன் ரூபாய் செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் தாக்கல் செய்யப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் தெரியவந்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு 2023 ஒகஸ்ட் மாதம் 10 பில்லியன் ரூபாய் கோரிக்கை முன்வைக்கப்பட்ட நிலையில் 2024 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் அதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டதாக தேர்தல்கள் ஆணையாளர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதேநேரம் அந்த ஒதுக்கீடு இரண்டு தேர்தல்களை நடத்த போதாது என்றும், பொதுத்தேர்தலை நடத்த வேண்டும் எனில் இதேபோன்ற மேலும் ஓர் ஒதுக்கீடு அவசியம் என்றும் தேர் தல்கள் ஆணையாளர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு 10 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதாக அண்மையில் அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்திருந்தார்.

இதேநேரம் இரண்டு தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கத்திடம் போதிய நிதி இல்லை என குறிப்பிட்டுள்ள அமைச்சர் பந்துல குணவர்தன, இந்த வருடம் நிச்சயம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்றும் உறுதியாகத் தெரிவித்துள்ளார். (04)


மாலைக்கதிர்
Maalaikkathir






சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 01 செவ்வாய்க்கிழமை 13.02.2024 கதிர் 180


# மக்கள் விடுதலை முன்னணிக்கு பொருளாதார அறிவு குறைவு!

## அமைச்சர் பந்துல குணவர்தன



மக்கள் விடுதலை முன்னணி போன்ற குழுக்களுக்கு அரச நிதி முகாமைத்துவம் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை பற்றிய அறிவு பலவீனமாகவே உள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்திருந்தார்.

“நாட்டை முன்னேற்றுவதற்கு ஜனாதிபதி முன்னெடுக்கின்ற

2➤

# யுக்திய நடவடிக்கை நிறுத்தப்படாது! பதில் பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு



ஜனாதிபதி, பிரதமர், அல்லது நாடாளுமன்றம் பணிப்புரை விடுத்தால் மாத்திரமே யுக்திய நடவடிக்கை நிறுத்தப்படும் என பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

“போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் திட்டமிட்ட குற்றச் செயல்களை முழுமையாக ஒழிக்கும் வரையில் இந்த யுக்திய நடவடிக்கையை தொடர்ந்து முன்னெடுக்கவுள்ளோம். நாட்டிலுள்ள சில சத்தம் போட்டாலும் ஒட்டுமொத்த நாட்டு மக்களை பாதுகாப்பதற்கு இந்த யுக்திய நடவடிக்கையை தொடருமாறு நான் கோரிக்கை விடுத்துள்ளேன்.

இந்த நடவடிக்கையை தொடர்ச்சியாக மேற்கொள்ளுமாறு மகா சங்கத்தினரும், தொண்ணூற்று ஒன்பது வீதமான நாட்டு மக்களும் கோருகின்றனர்.

எனவே ஜனாதிபதியோ, பிரதமரோ அல்லது நாடாளுமன்றமோ இதனை நிறுத்துமாறு அறிவிக்கும் வரையில் இதனை நாம் தொடர்ந்து முன்னெடுப்போம்” என பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மேலும் தெரிவித்தார்.

# அமெரிக்க எரிபொருள் விநியோக நிறுவனம் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துடன் ஒப்பந்தம்

உள்நாட்டு எரிபொருள் சந்தையானது வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு திறந்து விடப்பட்டதன் பின்னர், அமெரிக்க நிறுவனமான ஷெல் ஆர்எம் பார்க்ஸ் (ளூநடட சுஆ Pயசமள) மற்றும் சிலோன் பெற்றோலியம் வொல்சேல் டேர்மினல் கம்பனி (ஊநலடழn Pநவசழ-டநரஅ றூழடநளயடந வுநசஅiயெட ஊழஅியலெ) ஆகிய நிறுவனங்களுக்கிடையே எரிபொருள் சேமிப்பு மற்றும் விநியோகம் தொடர்பான ஒப்பந்தமொன்று நேற்று (12ஆம் திகதி) கைச்சாத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தம் கொலன்னாவை இலங்கை பெ-ற்றோலிய சேமிப்பு முனையத்தின் தலைமை அலு-வலகத்தில் இடம்பெற்றது. இதன் மூலம் அமெரிக்கன் ‘பார்க்ஸ்’ நிறுவனத்திற்கு சொந்தமான எரிபொருள் இருப்புக்களை நாட்டில் சேமித்து வைப்பதற்கும் விநியோகிப்பதற்கும் தேவையான வழிவகைகள் மேற்கொள்ளப்படும்.

கடந்த வருடம் (2023) ஜூலை 8 ஆம் திகதியன்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், இலங்கை பெற்றோலிய சேமிப்பு முனைய நிறுவனம் மற்றும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு ஆகியன இணைந்து மேற்படி ஒப்பந்தத்திற்கு முன்கூட்டியசே-வார் ஒப்பந்தமாக தமக்குள் உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட்டிருந்தமையும், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவின் ஆலோசனையின் பேரில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ரெப-27)

# முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால அமெரிக்காவுக்குச் சென்றுள்ளார்!

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று (12) அதிகாலை இந்தியா ஊடாக அமெரிக்கா சென்றுள்ளதாக கட்டுநாயக்க விமான நிலையத்தின் அதிகாரியொருவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

நேற்று அதிகாலை 2.50 மணியளவில் இந்தியன் ஏயார்லைன்ஸ் நிறுவனத்தின் ஏஐ - 284 ரக விமானத்தில் புது டில்லிக்குச் சென்று, அங்கிருந்து மற்றொரு விமானத்தில் அமெரிக்காவின் நியூயோர்க் நகருக்கு அவர் செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேற்படி அமெரிக்க விஜயத்தில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் அக்கட்சியின் மேலும் இரு முக்கியஸ்தர்களும் விஜயம் செய்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அமெரிக்காவில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்கள் பங்குகொள்ளும் மக்கள் சந்திப்புக்கள் சிலவற்றில் இவர்கள் கலந்துகொள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பணிப்பாளர் பிரபாத் மாதரகே தெரிவித்துள்ளார். இதற்கமைய, எதிர்வரும் 15ஆம் திகதி முதல் இந்த பொதுக் கூட்டத் தொடர்கள் ஆரம்பமாகவுள்ளதாகவும் ஊடகப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ரெப-29)

# இவ்வருட தேர்தல்கள் தொடர்பாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தகவல்

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலை நடத்துவது தொடர்பான அறிவிப்பை ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் உரிய காலத்திற்குள் நடத்தப்படும் என்பதுடன் குறிப்பிட்ட காலவரையறைக்குள், அடுத்த ஆண்டு பொதுத் தேர்தல் நடத்தப்படும். இதற்கான நிதி, 2025 வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் என அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தேர்தல்களை நடத்தும் பொறுப்பு தேர்தல் ஆணைக்குழுவைச் சார்ந்துள்ளதுடன் தேவையான சந்தர்ப்பங்களில் தேர்தல் ஆணைக்குழுவுடன் அரசாங்கம் இணைந்து செயற்படும் எனவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிவிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (04)

# சிறுவர்கள் மத்தியில் சுவாச - சரும நோய்கள் அதிகரித்து வருகின்றன!

## குழந்தை நல மருத்துவர் தீபால் பெரேரா



தற்போது நிலவும் வறட்சியான கால நிலை காரண மாக சிறுவர்கள் மத்தியில் சுவாச நோய்கள் மற்றும் சரும நோய்கள் அதிகரித்து வருவதாக கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் குழந்தை நல மருத்துவர் டொக்டர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

குழந்தைகளுக்கு முறையாக தண்ணீர் மற்றும் திரவ வகைகளை அருந்த வழங்காவிட்டால், அவர்கள் வெப்பத் தாக்கத்திற்கு ஆளாகி ஆபத்தை எதிர்நோக்கக் கூடும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

2➤


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# மட்டக்களப்பில் மின் வேலியில் சிக்கி உயிரிழந்த இருவரின் சடலங்கள் மீட்பு

மட்டக்களப்பு - வாழைச்சேனை, ஈச்சையடி பகுதியிலுள்ள பண்ணை ஒன்றில் சட்டவிரோத மின்சார வேலியில் சிக்கி உயிரிழந்தனர் எனக் கூறப்படும் இருவரின் சடலங்கள் இன்று மீட்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குடும்பிமலை பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய நபரும், அவரது மருமகனான புலிபாய்ந்த கல்லைச் சேர்ந்த 21 வயதுடைய நபரும் இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் பிரதி அமைச்சர் ஒருவருக்குச் சொந்தமான குறித்த பண்ணையை வாழைச்சேனையைச் சேர்ந்த நபர் ஒருவர் குத்தகை அடிப்படையில் நிர்வகித்து வருகின்றார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)



# ஐக்கிய மக்கள் சக்தியின் அமைப்பாளர் ஐ.தே.கவில்

ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல், கட்டுகம்பொல தொகுதி அமைப்பாளரான அசங்க பெரேரா, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இன்று இணைந்துள்ளார்.

வடமேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரான அசங்க பெரேரா, முன்னாள் அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேராவின் மகனாவார்.

காமினி ஜயவிக்கிரம பெரேரா, ஐக்கிய தேசியக் கட்சியில் தவிசாளர் பதவியை வகித்தவர். நல்லாட்சியின்போது அமைச்சுப் பதவியையும் வகித்தார். கடந்த பொதுத்தேர்தலில் போட்டியிடவில்லை. தற்போது நோய் வாய்ப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குருநாகல் சென்றிருந்தபோது, காமினி ஜயவிக்கிரம பெரேராவைச் சந்திக்க அவரின் வீட்டுக்குச் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையிலேயே காமினி ஜயவிக்கிரம பெரேராவின் மகன், அசங்க பெரேரா ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து விலகி, மீண்டும் ஐ.தே.கவுக்குள் சென்றுள்ளார். (அ)

# வட்டியை செலுத்த இணக்கம் தெரிவித்தது மின்சார சபை

புதிய மின்சார இணைப்புக்களை வழங்குவதற்காக நுகர்வோரிடமிருந்து சேகரிக்கும் வைப்புத்தொகைக்கு 2023 ஆம் ஆண்டிற்கான வட்டியைச் செலுத்தத் தயார் என இலங்கை மின்சார சபை இன்று (13) உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளது.

மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நுகர்வோர் சங்கத்தினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த விடயம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அப்போது, இலங்கை மின்சார சபை சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நிர்மலன் விக்னேஸ்வரன், மின்சார இணைப்புக்களுக்காக வாடிக்கையாளர்களிடம் இருந்து பெறப்படும் வைப்புத்தொகைக்கு 2023ஆம் ஆண்டுக்கான வருடாந்த வட்டியாக 11.67 வீதத்தை செலுத்துவதற்கு இலங்கை மின்சார சபை தயாராக உள்ளதாக நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இலங்கை மின்சார சபை இந்த வட்டியை செலுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

# போதைப்பொருள் கடத்திய 750 பெண்கள் சிறையில்!



போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட 750 பெண்கள் தற்போது சிறையில் இருப்பதாக சிறைச்சாலை ஆணையாளர் காமினி பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இப்பெண் கைதிகள் பொலிஸ் நிலையங்கள் உட்பட பல சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு, பல்வேறு குற்றச்செயல்கள் மற்றும் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட 1250 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பணப் பேராசையால் போதைப்பொருள் கடத்தல் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட தாம் தூண்டப்பட்டதாக இப்பெண்கள் கண்ணீருடன் கூறியதாக சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ரெப-30)

# அம்பாறை மாவட்ட வெள்ளப் பாதிப்பு நேரில் சென்று ஆராய்ந்த குழுவினர்



(எம் எப். நவாஸ்)

அண்மையில் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக அம்பாறை மாவட்டத்தில் குறிப்பாக அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, ஒலுவில் பாலமுனை, திராய்க்கேணி போன்ற பிரதேசங்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாயின.

இதற்கான காரணங்களை கண்டறிவதற்காக ஒலுவில் கலியோடை பாலம், ஆத்தியடிக்கட்டு, கோணவத்தை போன்ற நீர் தேங்கி நிற்கும் கரையோர பிரதேசங்களை இன்று அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்பு இணைத்தலைவருமான ஏ எல் எம். அதாவுல்லாஹ் அப்பகுதிக்குச் சென்றிருந்தார்.

அவருடன் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவர்த்தன, அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எச் பி. அனீஸ், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம் ஏ சி அகமது ஷாபிர், அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் எம் ஏ.அன்சார், அனர்த்த முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் எம் ஏ. ரியாஸ் மற்றும் நீர்ப்பாசன பொறியியலாளர்கள், துறை சார்ந்த அதிகாரிகளும் சென்று பார்வையிட்டு, எதிர்காலத்தில் இது போன்ற அனர்த்தங்கள் ஏற்படாமல் அதனை தடுக்க பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

## சிறுவர்கள் மத்தியில் சுவாச - ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆஸ்துமா போன்ற அறிகுறிகள் உள்ள குழந்தைகளுக்குக் கூட இந்நாட்களில் குளிப்பதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் எனவும் மற்றக் குழந்தைகளை ஒரு நாளைக்கு இரண்டு முறை குளிக்க வார்க்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சரும நோய்கள் இருப்பின் காலை அல்லது இரவு வேளையில் சுமார் 20 நிமிடம் நீரில் இருக்க விடுவதன் மூலம் அதனைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் மருத்துவர் தீபால் பெரேரா மேலும் தெரிவித்துள்ளார். (ரெப-28)

## மக்கள் விடுதலை முன்னணிக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேலைத்திட்டத்தை தவிர்த்து வேறு மாற்று வழிகள் காணப்படுமாயின் அது தொடர்பில் எந்தவொரு குழுவுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசாங்கம் தயார்.

அரச நிதி முகாமைத்துவம் தொடர்பில் போதிய அறிவு இல்லாத குழுக்கள், மக்கள் முன்பாக சென்று பொய்யான பிரச்சாரங்களை மேற்கொள்கின்றனர்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது என்பது வெறும் வார்த்தைகளால் முடியாது.

அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக மேடைகளில் சில குழுக்கள் பல்வேறு பொய்யான அறிக்கைகளை வெளியிடுகின்றன.

மக்கள் விடுதலை முன்னணி போன்ற குழுக்களுக்கு அரச நிதி முகாமைத்துவம் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை பற்றிய அறிவு பலவீனமாகவே உள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த சிலர் ஆட்சியில் பங்கேற்ற காலம் மிகக் குறைவு" எனவும் அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் குறிப்பிட்டார். (04)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# சாய்ந்தமருதில் புலமை மாணவர்களை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம்.இல்யாஸ் தலைமையில் பெற்றோர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட புலமை மாணவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் சாய்ந்தமருது லீ மெரிடியன் வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமாரும், கௌரவ அதிதியாக கல்முனை வலையக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீமும் விசேட அதிதிகளாக பிரதிக் வலையக் கல்விப் பணிப்பாளர்களான எம்.எச்.எம்.ஜாபீர், எம்.எச்.றியாஸா, பாடசாலை அபிவிருத்திக் குழுவின் செயலாளர் பொறியியலாளர் எம்.ஐ.எம்.றியாஸ், அதன் உறுப்பினர் எம்.ஸீ.எம்.ஹஸீர், கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள், பிரதி அதிபர்களான திருமதி குறைசியா றாபி, றின்ஷா பர்வின், உதவி அதிபர் எம்.ஏ.ஸி.எல்.நஜீம், பாடசாலையின் அதிபர்கள், பிரதி அதிபர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவில் இலவச குடிநீர் இணைப்பு வழங்கல்



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேச செயலக பிரிவில் உள்ள வறுமைக் கோட்டியின் கீழ் வாழும் 100 குடும்பங்களுக்கு முஸ்லிம் எயிட் நிறுவனத்தல் இலவச குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டுவருகிறது.

அதில் முதல் கட்டமாக 13 குடும்பங்களுக்கான இலவச குடிநீர் இணைப்புகள் நேற்று (12) கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.ஹனியினால் கையளிக்கப்பட்டன.

குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்து சுத்தமான குடி நீரினை வழங்கும் நோக்கில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்ற இந்த நீரிணைப்பு வழங்கும் நிகழ்வில் நிருவாக கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், முஸ்லிம் எயிட் நிறுவன வெளிக்கள இணைப்பாளர் றமீஸ் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# கலாநிதி ஜெயசிறிலுக்கு கட்சியினர் கௌரவம்



(வி.ரி. சகாதேவராஜா)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் காரைதீவு கிளைத் தலைவரும் சமூக செயற்பாட்டாளருமான முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறிலுக்கு சமூக சேவைக்காக கலாநிதி பட்டம் கிடைக்கப்பட்டமைக்கு, கட்சியின் மாவட்ட உறுப்பினர்கள் பாராட்டி கௌரவித்தார்கள்.

இலங்கைத் தமிழரசு கட்சியின் அம்பாறை மாவட்டத் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கவிந்திரன் கோடீஸ்வரன் தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் (12) திங்கட்கிழமை மாலை அவரது இல்லத்திற்கு சென்று தமது வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

அதன்போது கவிந்திரன் கோடீஸ்வரன் மற்றும் எஸ்.கணேஸ் ஆகியோர் அவருக்கு பொன்னாடை போர்த்தி மாலை சூட்டி கௌரவித்தார்கள்.

அங்கு கோடீஸ்வரன் மற்றும் கட்சி உறுப்பினர் ரமேஷ் இருவரும் அவரது சேவையை பாராட்டி உரையாற்றியிருந்தனர்.

# திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் நிகழ்வு நாளை

திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை சித்திரிக்கும் திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் வைபவம் தவக்காலத்தின் ஆரம்ப நாளாகிய நாளை (14) புதன்கிழமை மாலை 5 மணிக்கு இல.17,மார்ட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் 'கலைஞான சுரபி' தியான இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட மூத்த அருட்தந்தையர்களில் ஒருவரான அருட்தந்தை ம.றெஜி இராஜேஸ்வரன் அடிகள் கலந்துகொண்டு ஆசியுரை வழங்குவதுடன், ஆற்றுகையில் பங்கேற்கவுள்ள கலைஞர்களுக்கான பிரதிகளையும் வழங்கி வைப்பார்.

பிரதி வழங்கும் வைபவத்தில் வழமையாக திருப்பாடுகளின் நாடகத்தில் பங்கேற்கின்ற அனைத்துக் கலைஞர்களையும், புதிதாக இணைந்துகொள்ள விரும்புபவர்களையும் கலந்துகொள்ளுமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

இவ்வாண்டு திருப்பாடுகளின் நாடகம் மார்ச் மாதம் 21 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரையிலான நான்கு நாள்களுக்கு 'வேள்வித் திருமகன்' என்னும் பெயரில் மாலை 6.45 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் அமரர் நீ.மரிய சேவியர் அடிகளாரால் இறுதியாக எழுதப்பட்ட 'வேள்வித் திருமகன்' திருப்பாடுகளின் நாடகம், முதன் முதலாக 2012 ஆம் ஆண்டிலும், அதனைத் தொடர்ந்து 2014 ஆம் 2016 ஆம் ஆண்டுகளிலும் மேடையேற்றப்பட்டு பெரும் வரவேற்பைப் பெற்றது. தற்போது எட்டு ஆண்டுகளின் பின் மீண்டும் மேடையேற்றப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# எதிர்க்கட்சியாகச் செயற்படுவோம்! இம்ரான்கானின் கட்சி அறிவிப்பு




நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் அமர முடிவு செய்துள்ளதாக பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் தெஹ்ரீக்-ஏ-இன்சாஃப் (பிடிஐ) கட்சி அறிவித்துள்ளது.

பாகிஸ்தானில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற பொதுத் தேர்தலில் அதிக இடங்களைக் கைப்பற்றியிருந்தாலும், நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் அமர முடிவு செய்துள்ளதாக முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் தெஹ்ரீக்-ஏ-இன்சாஃப் (பிடிஐ) கட்சி அறிவித்துள்ளது. இது குறித்து அந்தக் கட்சியின் மூத்த தலைவர் கோஹர் அலி கான் தகவல் வழங்கியுள்ளார்.

பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-நவாஸ் (பிஎம்எல்-என்), பாகிஸ்தான் மக்கள் கட்சி (பிபிபி) ஆகிய இரு கட்சிகளுடனும் எங்களுக்கு கொள்கை முரண் உள்ளது. எனவே, இதில் எந்தக் கட்சியுடனும் இணைந்து ஆட்சிய மைக்கமாட்டோம். அதைவிட, நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துவிடலாம் என்று முடிவு செய்துள்ளோம்.

புதிய நாடாளுமன்றத்தில் ஒரு பொறுப்பான எதிர்க் கட்சியாக பிடிஐ செயல்படும். பிடிஐ கட்சியின் ஆதரவுடன் வெற்றி பெற்ற சுயேச்சை வேட்பாளர் வாசீம் காதிர் பிஎம்எல்-என் கட்சியில் இணையவிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இது குறித்து விசாரணை நடத்தி வருகிறோம்.

அவரைத் தவிர, பிடிஐ ஆதரவுடன் வெற்றி பெற்ற அனைத்து சுயேச்சைகளும் கட்சிக்கு தங்களது ஆதரவை தொடர்ந்து வழங்கி வருகின்றனர். முந்தைய காலங்களிலும் சிலர் கட்சி விட்டு கட்சி தாவினர். அவர்களை இந்தத் தேர்தலில் மக்கள் புறக்கணித்துவிட்டனர்.

கைபர்-பக்துன்கவா மகாணத்தில் ஆட்சியமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கட்சித் தலைவர் இம்ரான் கான் எங்களுக்கு உத்தரவிட்டுள்ளார், என்றார் அவர்.

பாகிஸ்தானின் புதிய நாடாளுமன்றத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் கடந்த 8 ஆம் திகதி நடைபெற்றது. ஊழல் மற்றும் ரகசியக் காப்புறுதி மீறல் வழக்குகளில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதால் இந்தத் தேர்தலில் இம்ரான் கானால் போட்டியிட முடியவில்லை. மேலும் அவரது பிடிஐ கட்சியின் கிரிக்கெட் மட்டை சின்னத்தை தேர்தல் ஆணையம் முடக்கியதுடன், தேர்தலில் போட்டிய அந்தக் கட்சிக்குத் தடை விதித்தது. அதையடுத்து, பிடிஐ வேட்பாளர்கள் அனைவரும் சுயேச்சையாகப் போட்டியிட வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்தத் தேர்தலில், ராணுவத்தின் ஆதரவு பெற்ற

## ஆட்சி அமைப்பதில் இழுபறி நீடிப்பு

முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீஃப் வெற்றி பெற்று ஆட்சியமைப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இம்ரானின் பிடிஐ கட்சி ஆதரவு பெற்ற வேட்பாளர்களே அதிக இடங்களைக் கைப்பற்றியுள்ளனர். அவர்களுக்கு நாடாளுமன்றத்தில் 101 இடங்கள் கிடைத்துள்ளன. இருந்தாலும், 336 இடங்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் ஆட்சியமைப்பதற்கு 169 இடங்கள் தேவை என்ற நிலையில், புதிய அரசை அமைப்பதற்கு இன்னும் 68 இடங்கள் தேவைப்படுகின்றன.

பாகிஸ்தானைப் பொறுத்தவரை, மொத்தமுள்ள 336 நாடாளுமன்ற இடங்களில் 266 இடங்களில் மட்டுமே நேரடி போட்டி நடைபெறும். எஞ்சிய 60 இடங்கள் மகளிருக்கும், 10 இடங்கள் சிறுபான்மையினருக்கும் ஒதுக்கீடு செய்யப்படும். 266 தொகுதிகளில் கிடைத்த இடங்களின் அடிப்படையில் கட்சிகளுக்கு இந்த 70 இடங்களும் ஒதுக்கப்படும். எனினும், இந்தத் தேர்தலில் பிடிஐ கட்சி நேரடியாகப் போட்டியிடாததால் அதிக இடங்களைக் கைப்பற்றியும் அந்தக் கட்சிக்கு நியமன இடங்கள் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இந்தச் சூழலில், பிற கட்சிகளுடன் இணைந்து ஆட்சியமைக்காமல் எதிர்க்கட்சியாக செயல்படுவது என்று பிடிஐ கட்சி முடிவு செய்துள்ளது

பிஎம்எல்-என் - பிபிபி தீவிர பேச்சுபுதிய அரசை அமைப்பதற்காக முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீஃப் தலைமையிலான பிஎம்எல்-என் கட்சியும், முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் பிலாவல் புட்டோ ஜர்தாரியின் தலைமையிலான பிபிபி கட்சியும் தீவிர பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றன. இந்தத் தேர்தலில் பிஎம்எல்-என் கட்சிக்கு 75 இடங்களும், பிபிபி கட்சிக்கு 54 இடங்களும் கிடைத்துள்ளன.

கூட்டணியில் இணைய விருப்பம் தெரிவித்துள்ள முத்தாஹிதா குவாமி இயக்கம் (எம்க்யூஎம்-பி) கட்சியிடம் 17 இடங்கள் உள்ளன. ஒதுக்கீடு செய்யப்படவிருக்கும் நியமன இடங்களையும் சேர்த்தால் அந்தக் கட்சிகளால் இணைந்து கூட்டணி அரசை அமைக்க முடியும். இருந்தாலும், பிரதமர் பதவியை தங்களது கட்சித் தலைவர் பிலாவல் அலி புட்டோவுக்கு வழங்கவேண்டும் என்று பிபிபி கட்சி நிபந்தனை விதித்து வருகிறது.

ஆனால், அந்தக் கட்சிக்கு அவைத் தலைவர்கள் பதவி, முக்கிய அமைச்சரவைகள் ஆகியவற்றை வழங்குவதாக பிஎம்எல்-என் கட்சி கூறிவருகிறது. புதிய அரசில் நவாஸ் ஷெரீஃப்தான் பிரதமராக வேண்டும் என்று அந்தக் கட்சி வலியுறுத்தி வருகிறது. இதனால், கூட்டணி அரசை அமைப்பதில் இன்னும் ஒருமித்த கருத்து ஏற்படாததால் இரு கட்சிகளும் தீவிர பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றன. (04)

# அமேசான் விற்பனைத் தளத்தின் 1.2 கோடி பங்குகள் விற்பனை!




அமேசான் விற்பனைத் தளத்தின் நிறுவனரான ஜெப் பெசோஸ் அமெரிக்க ஆணையத்துக்கு அளித்த அறிக்கையில், 200 கோடி அமெரிக்க டொலர் மதிப்புள்ள ஏறத்தாழ 1.2 கோடி அமேசான் பங்குகளை விற்றதாக தெரிவித்துள்ளார்.

அமெரிக்க பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணையத்துக்கு அவர் அளித்த அறிக்கையில், பெப்ரவரி 7 மற்றும் 8 ஆகிய தேதிகளில் 1 கோடியே 19 லட்சம் பங்குகளை விற்பனை செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

சியாட்டலை தலைமையிடமாக கொண்டுள்ள அமேசானின் நிகர மதிப்பு 2 லட்சம் கோடி அமெரிக்க டாலர்களுக்கும் அதிகம். 30 ஆண்டுகளுக்கு முன்பு வீட்டின் கேரேஜில் ஆரம்பித்த அமேசான் இன்று உலகம் முழுவதும் செயல்படும் விற்பனை நிறுவனம்.

மற்றொரு அறிக்கையில் பெசோஸ், 840 கோடி அமெரிக்க டொலர் மதிப்புள்ள அமேசானின் 5 கோடி பங்குகளை விற்கவுள்ளதைக் குறிப்பிட்டுள்ளார்.

பெசோஸ், 2021 இல் அமேசானின் தலைமை நிர்வாக அதிகாரி பொறுப்பில் இருந்து விலகினார். அவரது மற்ற திட்டங்களான, ஏவுகணை நிறுவனம் உள்ளிட்டவற்றில் கவனம் செலுத்த முடிவெடுத்தது குறிப்பிடத்தக்கது. (04)

# பிலிப்பைன்ஸ் நாட்டில் ஏற்பட்டசுரங்க நிலச்சரிவில் சிக்கி 68 பேர் உயிரிழப்பு



பிலிப்பைன்ஸில் கடந்த வாரம் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 68 ஆக உயர்ந்துள்ளது.

மிண்டானாவ் மாகாணம், மசாரா கிராமத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிகளில் இருந்து நேற்று திங்கட்கிழமை மேலும் 12 உடல்கள் மீட்கப்பட்டன. அதையடுத்து, நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 68 ஆக உயர்ந்துள்ளது.

இது தவிர, நிலச்சரிவு ஏற்பட்டபோது அங்கிருந்த மேலும் 51 பேரைக் காணவில்லை என்றும், அவர்களைத் தேடும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்றும் அதிகரிகள் கூறினர்.

பிலிப்பைன்ஸின் தெற்குப் பகுதியில் தங்கச் சுரங்கங்கள் அமைந்துள்ள மசாரா கிராமத்தில் இந்த நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் சிக்கி உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் சாலையில் நிறுத்தப்பட்டிருந்த 2 பேருந்துகளில் அமர்ந்திருந்த சுரங்கத் தொழிலாளர்கள் என்று கூறப்படுகிறது.

சம்பவப் பகுதிகளில் ராணுவம், பொலிஸார் மற்றும் தன்னார்வலர்கள் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு நிலச்சரிவில் காயமடைந்த 31 கிராமத்தினரை மீட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (04)

# ஷரியா அடிப்படையிலான 16 சட்டங்களை மலேசிய உச்சநீதிமன்றம் நீக்கி அறிவிப்பு

இஸ்லாமிய மதச் சட்டமான ஷரியாவை அடிப்படையாகக் கொண்டு மலேசியாவின் கிளாந்தான் மாகாண அரசு இயற்றிய 16 சட்டங்களை அந்த நாட்டு உச்சநீதிமன்றம் செல்லாதவையாக அறிவித்துள்ளது.

மத்தியில் எதிர்க்கட்சியாக இருந்து வரும் பெரிக்காத்தான் கட்சி, கிளாந்தான் மாகாணத்தில் ஆட்சி செலுத்தி வருகிறது. அந்த மாகாண அரசு, பாலியல் குற்றங்கள், பாலினம் மாறி உடை அணிதல், போலி சாட்சியம் அளித்தல் போன்ற பல்வேறு குற்றங்களுக்கு ஷரியா அடிப்படையில் தண்டனை வழங்கும் புதிய சட்டங்களை இயற்றியது.

எனினும், ஏற்கெனவே மத்திய அரசு இயற்றியுள்ள மத அடிப்படைச் சட்டங்களில் மாகாணச் சட்டங்கள் குழப்பத்தை ஏற்படுத்தும் என்பதால் அந்தச் சட்டங்களை ரத்து செய்வதாக உச்சநீதிமன்றம் தெரிவித்தது. (04)

# சாய்ந்தமருதில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு



(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக கடமையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற கே ஆதம்பாவா, எம்.நபார் மற்றும் சமுர்த்தி முகாமையாளராக பதவியுயர்வு பெற்ற எம்.எம்.எம்.முபாறக் ஆகியோருக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் (11) சாய்ந்தமருது சமுர்த்தி வங்கி சங்க கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில் சமுர்த்தி தலைமைப் பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சி.ஏ. நஜீம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும் சமுர்த்தி மாவட்ட பதில் பணிப்பாருமான வி. ஜெகதீசன், கௌரவ அதிதியாக சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் உள்ளிட்ட சமுர்த்தி வங்கி சங்க முகாமைத்துவ பணிப்பாளர் றியாத் ஏ. மஜீத், வங்கி முகாமையாளர் ஐ.எல்.சித்தி ஹிதாயா கருத்திட்ட முகாமையாளர் எஸ்.றிபாயா, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது ஓய்வு மற்றும் பதவியுயர்வு பெற்ற சென்ற உத்தியோகத்தர்களுக்கு நினைவுச் சின்னம் மற்றும் அன்பளிப்புகள் என்பன அதிதிகளால் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# கல்முனை பிரதேச செயலகத்தில் நலன்புரி நன்மைகள் பிரிவு திறப்பு



(எம்.எம்.றம்ஸீன்)

அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் அசுவெசும நலன்புரி நன்மைகளை பொதுமக்களுக்கு இலகுவாக பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் "நலன்புரி நன்மைகள் பிரிவு" கல்முனை பிரதேச செயலக வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

அரசாங்கம் அசுவெசும திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை நடைமுறைப்படுத்தப்படுத்தவுள்ள நிலையில் கல்முனை பிரதேச செயலக பிரிவிலுள்ள பொதுமக்களின் நன்மை கருதியே இதற்கான தனியான பிரிவு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபர், நிருவாக உத்தியோகத்தர் ஏ.சி.எம். பளீல், நிருவாக கிராம உத்தியோகத்தர் உபுல் குமார, அபிவிருத்தி இணைப்பாளர் ஏ.யாசீன் பாவா, பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் (திட்டமிடல்) ஏ.எஸ்.எம்.முஜாஹித், நலன்புரி நன்மைகள் பிரிவு பொறுப்பாளர் ஏ.எல்.ஏ.நஜீபர் உட்பட சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# பைந்தமிழ்ச்சுடர் நீலையூர் சுதாவின் "கொத்துவேலி" கவிதை நூல் வெளியீடு



(ஹஸ்பர் ஏ.எச்)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பைந்தமிழ்ச்சுடர் சி.சுதாகரனின் ("நீலையூர் சுதா") "கொத்துவேலி" கவிதை நூல் வெளியீட்டு விழாவானது அண்மையில் பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் எஸ்.நவநீதன் தலைமையில் திருகோணமலை நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சி கலந்து கொண்டிருந்தார்.

வரவேற்புரையை, எண்ணம் போல் வாழ்க்கை இலக்கிய மன்றத் தலைவர் எழுத்தாளர் கனகதீபகாந்தனும், நூலாசிரியர்பற்றி சமூக சேவைத்திணைக்கள மாகாணப் பணிப்பாளர் எழுத்தாளர் இரா.கி.இளங்குமுதனும், நூல் பற்றிய சிறப்பு நயவுரையினை ஓய்வுநிலை அதிபர் கவிஞர் இரா.இரத்தினசிங்கமும் வழங்கினர்.

எண்ணம்போல் வாழ்க்கை இலக்கியமன்றத்தின் ஒருங்கமைப்பில், திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளரும் எழுத்தாளருமான சூ.பார்த்தீபன் இந்நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

கிராமத்தின் மரபுகள், சடங்குகள் மற்றும் பழக்கவழக்கங்களை இளைய தலைமுறையினருக்கு ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்கு கொண்டு சேர்க்கும் சிறந்ததோர் யோசனையாக இவரது கவித்துவம் அமைந்திருப்பது பற்றி அங்கு சிலாகிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாணசபைச் செயலாளர்கள், பிரதிப்பிரதம செயலாளர்கள், திருமலை வளாக முதல்வர், கிழக்கு மாகாணக் கலைஞர்கள், கலை ஆர்வலர்கள் மற்றும் நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



# பரீஸ் ஒலிம்பிக் வாய்ப்பை இழந்தது பிரேஸில்! ஆஜென்ரீனா – பராகுவே அணிகள் தகுதி



ஒலிம்பிக் கால்பந்து நடப்பு சம்பியனான பிரேஸில், இந்த ஆண்டு நடைபெறவுள்ள பரீஸ் ஒலிம்பிக் போட்டிக்குத் தகுதிபெறத் தவறி ஏமாற்றத்தை சந்தித்துள்ளது.

தென்னமெரிக்க ஒலிம்பிக் தகுதிச்சுற்றுப் போட்டியில் பிரேஸில் 0-1 கோல் கணக்கில் ஆஜென்ரீனாவிடம் தோல்வி கண்டதால், இந்தப் பின்னடைவு ஏற்பட்டது. இந்த ஆட்டத்தில் ஆஜென்ரீனாவுக்காக லூசியானோ கோண்டு 78 ஆவது நிமிஷத்தில் ஸ்கோர் செய்தார்.

இந்தத் தகுதிச்சுற்று முடிவில் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் பரீஸ் ஒலிம்பிக்கிற்கு தகுதிபெறும் வாய்ப்பு இருந்த நிலையில், பராகுவே 7 புள்ளிகளுடன் முதலிடத்தையும், ஆஜென்ரீனா 5 புள்ளிகளுடன் 2 ஆம் இடத்தையும் பிடித்து ஒலிம்பிக் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளன.

ஆஜென்ரீனா, பிரேஸில் அணிகளைப் போல நட்சத்திர வீரர்களைக் கொண்டிருக்காத பராகுவே ஒலிம்பிக்குக்கு தகுதிபெற்றிருக்க, கடந்த 2016, 2020 ஒலிம்பிக் போட்டிகளில் அடுத்தடுத்து சம்பியனான பிரேஸில் அணி ஏமாற்றத்தை சந்தித்திருக்கிறது. கடந்த 2004க்குப் பிறகு அந்த அணி ஒலிம்பிக் போட்டிக்குத் தகுதிபெறாதது இதுவே முதல் முறையாகும்.

பராகுவே கடந்த 2004 ஒலிம்பிக் போட்டியில் இறுதி ஆட்டம் வரை வந்து, அதில் ஆஜென்ரீனாவிடம் தோற்று வெள்ளிப் பதக்கம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (04)

# அலி சப்ரி ரஹீம் எம்.பி. பயணித்த கார் இன்று அதிகாலை விபத்தில் சிக்கியது

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ் )

நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் பயணித்த கார் விபத்தில் சிக்கியதில் ஒருவர் காயமடைந்துள்ளதாக சாலியவெவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து இன்று (13) அதிகாலை 1 மணியளவில் புத்தளம் - அனுராதபுரம் வீதியின் 15 ஆம் தூண் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

அளுத்கம மேல்புளியங்குளம்பகுதியைச் சேர்ந்த எச்.எம். ஹர்ஷன பிரதீப் என்பவரே விபத்தில் காயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் சிகிச்சைக்காக புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் புத்தளத்தில் இருந்து அனுராதபுரம் நோக்கி பயணித்த போது, அவரது கார் அதே திசையில் பயணித்த உழவு இயந்திரத்தின் பின்புறம் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

உழவு இயந்திரத்தை ஓட்டிச் சென்றவரே இந்த விபத்தில் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்து தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பயணித்த காரின் சாரதி சாலியவெவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாலியவெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.








## சாய்ந்தமருது பொலிவேரியன் கிராம பிரதான இரும்புப் பாலம் சிதிலம்!



(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது பொலிவேரியன் குடியேற்ற கிராமத்திற்கு செல்லும் பிரதான இரும்பு பாலம் பொதுமக்கள் பயணிக்க முடியாத நிலையில் துருப்பிடித்து ஓட்டை விழுந்து காணப்படுகிறது.

சாய்ந்தமருதிலுள்ள எம்.எஸ்.காரியப்பர் வித்தியாலயம், கலாசார மண்டபம், பொது விளையாட்டு மைதானம், சுகாதார வைத்திய நிலையம், ஹிஜ்ரா பள்ளிவாசல், குவாசி நீதி மன்றம், பெண்கள் அரபிக் கல்லூரி, கால்நடை அபிவிருத்தி நிலையம் போன்ற முக்கியமான இடங்களுக்குச் செல்லும் மக்களும் வாகனங்களும் இப் ஸ்ரீபாலத்தையே பயன்படுத்த வேண்டியுள்ளது.

இப்பாலம் முற்றாக இடிந்து அழிவதற்கு முன் அதனைத் திருத்தித் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பிரதேச மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

## ஓய்வு பெறும் டொக்டர் எஸ். கியாஸ்தீன் அட்டாளைச்சேனையில் கௌரவிப்பு



(கே எ ஹமீட்)

அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலையில் பணியாற்றி நேற்றைய தினம் சேவையிலிருந்து ஓய்வுபெற்றுக்கொண்ட டொக்டர் எஸ். கியாஸ்தீன், வைத்தியசாலையின் வைத்தியர்கள் மற்றும் ஊழியர்களால் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி யூ.எல்.எம். வபா தலைமையில், அட்டாளைச்சேனை வைத்தியசாலையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், டொக்டர் கியாஸ்தீனுக்கு நினைவுச் சின்னம் மற்றும் பாராட்டுப் பத்திரம் என்பன வழங்கப்பட்டன.

அட்டாளைச்சேனையைச் சேர்ந்த டொக்டர் கியாஸ்தீன் 1986 ஆம் ஆண்டு வைத்தியராக நியமனம்பெற்று சாய்ந்தமருது வைத்தியசாலையில் முதன்முதலாக கடமையைப் பொறுப்பேற்றார். இவர் தனது பணிக்காலம் முழுவதும் சொந்த மாவட்டமான அம்பாறை மாவட்டத்திலேயே பணியாற்றியிருந்தார்.

1990ஆம் ஆண்டு தொடக்கம் 1992ஆம் ஆண்டு வரை, நாட்டில் பிரச்சினை உச்ச கட்டத்தில் இருந்த போது அட்டாளைச்சேனை, பாலமுனை மற்றும் ஒலுவில் ஆகிய மூன்று பிரதேச வைத்தியசாலைகளிலும் தனியொரு வைத்தியராக அர்ப்பணிப்புடன் இவர் பணியாற்றியிருந்தமை நேற்று நினைவுபடுத்தப்பட்டது.

குறித்த மூன்று வைத்தியசாலைகளுக்கும் இவர் ஒருவர் மட்டுமே அந்தக் காலப்பகுதியில் வைத்தியராக இருந்தார் என்பதும் குறிப்பிடப்பட்டது.

டொக்டர் கியாஸ்தீன், தனது 63 ஆவது வயதில் அரச பணியிலிருந்து நேற்றை தினம் ஓய்வுபெற்றுள்ளார்.

JRIDE
BEYOND THE ROAD

Safety and comfort are our concern

# ஜேரைட் JRIDE

## TAXI APP FROM JAFFNA

இலங்கை முழுவதும் | Islandwide

DOWNLOAD PASSENGER APP:

ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.

**நாங்கள் தயாராகிவிட்டோம்!**

யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)



jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local

இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

GET IT ON Google Play
Download on the App Store





வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!

உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!

இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!

GET IT ON Google Play
Download on the App Store

DOWNLOAD DRIVER APP:

jride
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local

YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE



## SCHEDULED BOOKING

New Feature
புதிய வசதி

நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?

விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?

எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.

HOTLINE : 706563213 / 703563213



## JRIDE TAXI APP
## SPEED IT NET

பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

+94 703 563213
www.jride.lk

மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!